**SC.No. 90/2020**
**நாள். 11.02.2026.**
**அ.சா. 4 – சிங்காத்துரை**
(எதிரி ஆஜர்)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

இறந்துபோன ராஜா எனக்கு தம்பிமுறை என்றால் சரிதான். ராஜாவின் தாயார் மீனாட்சி திருமணமாகி தனியாகத்தான் இருக்கிறார் என்றால் சரிதான். இறந்துபோன ராஜாவிற்கு திருமணமானது, அவரது மனைவி தற்கொலைசெய்துகொண்டது போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ராஜா இறப்பதற்கு முன்பாக என்ன வேலை பார்த்தார், எங்கு பார்த்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நல்லதுகெட்டது போன்ற நிகழ்வுகளில்தான் நான் மீனாட்சியை சந்திப்பேன் என்றும் மற்ற நேரங்களில் எனக்கும் மீனாட்சிக்கும் எந்த தொடர்போ, சந்தித்துக்கொள்வதோ என்றால் இல்லை. ராஜா குத்துப்பட்டு மருத்துவமனையில் இருக்கிறார் என்ற விவரம் எனக்கு போன் மூலம் மீனாட்சி சொலலித்தான் தெரியும் என்றால் சரிதான். நான் இராமநாதபுரம்அரசு மருத்துவமனையில் ராஜாவை பார்க்கபோன தேதி, மாதம் தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால், ராஜா இறந்துபோன பிறகு 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த ராஜாவை பார்க்கபோனபோது அவருக்கு அதிகப்படியான காயங்கள் இருந்தது என்பதால், மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லச் சொன்னார்கள் என்றும், நானும் மதுரைஅரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது சென்றேன் என்றும், அங்கு 5 நாட்கள் ராஜாவுடன் இருந்தேன் என்றும் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை சொல்லவில்லை என்றால் ஆய்வாளர் என்னிடம் கேட்கவில்லை அதனால் நான் சொல்லவில்லை. எதிரி சரவணன் யார், அவரது அப்பா யார் எந்த ஊரில் வசித்து வருகிறார், என்ன வேலை செய்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு இந்த

வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றும், நான் எங்கும் செல்லவில்லை என்றும், எதுவும் செய்யவில்லை என்றும், மீனாட்சி எனக்கு சித்தி என்பதால் என்னை சாட்சியாக போட்டுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.